தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1974 மார்ச் 14.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள். கேள்வி 411. திரு என். கே. பழனிசாமி அவர்கள் கேள்விக்கு மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் விடையளிக்கலாம்.

1. தகவல் கோரல்.

ஒத்திவைக்கப்படும் வினாக்கள் பற்றி உறுப்பினர்களுக்கு முன்னதாக அறிவிப்பது குறித்து.

Thiru K. T. K. TANGAMANI : Before questions are taken up, I would like to make a submission. The questions are entered in the list of business and we found that yesterday and day-before-yesterday some questions were postponed. We would like to know whether any of the questions are going to be postponed today and if so, we would like to know when questions postponed yesterday and day-before-yesterday are likely to come?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட கேள்விகள் இன்றைய பட்டியலில் இருந்தால் அவை இன்று எடுத்துக்கொள்ளப்படும் என்று அர்த்தம். இன்றைய பட்டியலில் உள்ள கேள்விகளைப் பொறுத்த வரையில், அவற்றில் ஏதாவது ஒத்திவைக்கப்படுமா என்பது, அமைச்சர் யாராவது வரவில்லையானால், அல்லது ஒத்திவைக்கவேண்டும் என்று அமைச்சர்களிடமிருந்து தகவல் வந்தால் அவை ஒத்திவைக்கப்படும். இன்றையகேள்விகளைப்பொறுத்து, அப்படிப் பட்ட தகவல் ஏதும் வரவில்லை.

Thiru K. T. K. TANGAMANI : Sir, the Ministers have got the right to request you to get the questions postponed. Normally the practice is, they address you ; but if such a thing happens we would like you to inform us, in advance before the questions are taken up, 'that the following questions addressed to a particular Minister will be taken up on a particular day.' Otherwise, what happens is, we come preparing ourselves for putting supplementary questions but then we are informed that some questions are going to be postponed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விப் பட்டியலில் கண்டுள்ள கேள்விகளை வரிசையாக எடுத்துக்கொள்ளும்போது, யாராவது அமைச்சர் தம்முடைய கேள்விகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கோரி வேண்டுகோள் விடுத்திருந்தால், அந்தக் கேள்விகள் வரும்போது, "வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன" என்று சொல்கிறேன். ஒவ்வொரு நாளும் கேள்விகளை எடுத்துக்கொள்ளும்போது, இந்த இந்தக் கேள்விகள் ஒத்திவைக்கப்படும் என்று முன்கூட்டியே தெரிவிக்குமாறு சொல்கிறீர்கள். அது முடியுமா என்று பார்க்கலாம்.

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Tourist Bungalows.

* 411 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal to provide boarding houses and travel facilities at cheaper rates for foreign tourists in the Tourist Centres?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல இடங்களில் சுற்றுலா மாளிகைகளை நடத்தி வருகிறது. இந்த விடுதிகளில் உணவு, உறையுள் ஆகியவற்றுக்கான கட்டணங்கள் மிதமாகவே உள்ளன. சுற்றுலா பயணிகளின் வசதிக்காக முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிடுவதற்கான வரையறுத்த சுற்றுப் பயணங்களும் (Package Tours) கழகத்தினால் நடத்தப்படுகின்றன. இத்தகைய சுற்றுப் பயணங்களுக்குப் பயணிகள் அதிகமாக ஆதரவளிக்கின்றனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிற சுற்றுலா மாளிகைகள், வரையறுத்த சுற்றுப் பயணங்கள் ஆகியவற்றிற்கு விதிக்கும் கட்டணங்கள் தரத்தைக் கருதிப் பார்க்கும்போது மிதமானவை என்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், பயண முகவர்களும் பாராட்டியுள்ளனர்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, மாமல்லபுரம் போன்ற இடங்களில் உள்ள காட்டேஜ்களில் 60 முதல் 110 ரூபாய் வரை ரூம்களுக்கு மட்டும் வாடகை வாங்குகிறார்கள். டாக்சி கட்டணமாக 150 முதல் 200 ரூபாய் வரை வாங்குகிறார்கள். இதைக் குறைக்கவேண்டும். வாடகைகட்டணம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது ஆகவே, எல்லா இடங்களிலும் கட்டணங்கள் ஒரே மாதிரியாக இருக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பாகவும், தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் சார்பாகவும் கட்டப்படுகிற மாளிகைகளுக்குத்தான் நாம் கட்டண விகிதங்களை நிர்ணயிக்க முடியும். மற்ற இடங்களில் தனியார் நடத்துகிற அத்தகைய